Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

Calendar Case No.C.C.No.2/2026

Deposition of PW3

| | |
|---|---|
| Name | : வசந்தா **( காவல் ஆய்வாளர்)** |
| Father's Name | : **கிருஷ்ணன்** |
| Village | : **நாமக்கல்** |
| Taluk | : **நாமக்கல்** |
| District | : **நாமக்கல்** |
| Religion | : Hindu |
| Age | : 49 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08.07.2026

**எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை.**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம் புதுசத்திரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 20.08.2024 ம் தேதி நான் அரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் பணியில் இருந்தபோது அன்றைய தினம் பகல் 12.30 மணியளவில் எனது தலைமையில் நானும் என்னுடன் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோருடன் எனக்கு கிடைத்த தகவலின்பேரில் மது விலக்கு குற்றம் தடுப்பு சம்பந்தமாக கோபிநாதம்பட்டி கூட்டு ரோடு இந்தியன் ATM அருகில் கண்காணித்து கொண்டிருந்தபோது எதிரியை சந்தேகத்தின்பேரில் சோதனை செய்தபோது எதிரி 180 ML அளவு கொண்ட DayNight Brandy – 26 பாட்டில்கள் விற்பனைக்காக வைத்திருந்தார் எங்களை கண்டவுடன் தப்பிஓட முயன்றவரை போலிஸ் பார்டி உதவியுடன் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது அவர் அரசு மதுபானத்தை மொத்தமாக வாங்கி வந்து பொதுமக்களிடம் சில்லரையில் பாட்டில்களை அதிக விலைக்கு விற்பணை செய்ய வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார். எதிரியை நான் அந்த இடத்திலேயே கைது செய்தேன்.

மேலும் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் என்னுடன் வந்த காவலர்கள் முன்னிலையில் எதிரியிடம் இருந்து 180 ML அளவு கொண்ட Day Night Brandy – 26 பாட்டில்களை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன்.

கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட மது பாட்டில்கள் மற்றும் எதிரியுடன் நிலையம் வந்தடைந்தேன் எதிரி மீது அரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு குற்ற எண் 669/2024 சட்டபிரிவுகள் 4(1)(C) TNP ACT படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளை சம்பவ இடத்திலேயே கொட்டி அழிக்கப்பட்டது.

எதிரியை நிலைய பிணையில் விடுவித்தேன்.

சாட்சிகள் 1 மற்றும் 2 ஐ தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து 20.08.2024 ம் தேதி எதிரிக்கு எதிராக 4(1)(C) TNP ACT படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

கைப்பற்றப்பட்ட பாட்டில்கள் மூடி திறந்த நிலையில் இருந்தது.

அனைத்து பாட்டில்களும் திறந்த நிலையில் இருந்தது.

கைப்பற்றிய மதுவை ஆய்விற்கு அனுப்பவில்லை.

கைப்பற்றுதல் மகஜர் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது.

சம்பவ இடத்தில் மதுபானங்களை கைப்பற்றும்போது போட்டோ வீடியோ எடுக்கவில்லை.

எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை சம்பயிடத்திலியே காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் வாய் மொழி உத்தரவின் பேரில் கொட்டி அழித்துவிட்டோம்.

சம்பவ நேரம் அரசு மதுபான கடை திறந்திருக்கும் நேரம் என்பதால் எதிரி மதுபானங்களை சில்லரையில் விற்பனை செய்யவேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல.

நான் சம்பவயிடம் செல்லாமல் புள்ளி விவரத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**